RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21s139

OPEN ACCESS

# குறுந்தொகை பாடல்களில் உளவியல் பார்வை

## கண்மணி ராஜசெல்வி [அ,*]

[அ] தமிழ்த்துறை, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, விழுப்புரம்- 605602, தமிழ்நாடு, இந்தியா

# Kurunthogai Padalgalil Ulaviyal Parvai

## G. Kanmani Rajaselvi [a, *]

[a] Department of Tamil, Theivanai Ammal College for Women, Viluppuram-605602, Tamil Nadu, India

* Corresponding Author: Kanmanirajaselvi1987@gmail.com

Received: 04-11-2020
Revised: 16-06-2021
Accepted: 20-06-2021
Published: 22-06-2021

Check for updates

**ABSTRACT**

The literature also serves as a testament to the way of life of the ancients. Poets' express intuitions with aesthetic perspective. Whiskers. It is not possible to express oneself so clearly, even if one enjoys the interiors without transforming one's inner feelings. Explore the pantry in a more subtle way than that. They specialize in making other people understand what they think they are trying to visualize, just as men's feel a woman's feelings and women's feelings. Poets with such subtle creativity are also seen as psychoanalysts. Various studies have been performed on the Sangam literature. These studies are performed on human behaviors and the flow of the mind. The psychoanalytic functions of the characters in the short stories are explained psychologically.

**Keywords:** Intuitions, Males poets, Females poets, Kurunthogai.

## முன்னுரை

படைப்பாளன் ஒரு மனநோயாளி என்றும் குழந்தைப் பருவத்தில் அமுக்கிவைக்கப்பட்டாலியல் எண்ணங்களே மடைமாற்றம் பெற்று படைப்பாளனாக காணப்படுகின்றனர். வாழ்வின் இன்ப துன்பங்களைச் சித்தரிக்கின்றன இலக்கியங்கள். இந்த இலக்கியத்தின் வழியாக தனிமனிதன் மற்றும் சமூதாயத்தின் மனச்சிதைவை உளவியல் நோக்கில் அறிய முடிகின்றது.

கலைஞர்கள் பொதுவாக எழுத்துலகப் படைப்பாளர்கள் தம் மனத்தே தேங்கிக் கிடக்கும் உணர்வுகளை அவை தோன்றியவாரே படைக்காமல் பல்வேறு உத்திகளை கையாண்டு சமூதாயம் ஏற்றுக் கொள்ளத் தக்கவகையில் உருமாற்றிக் கவிதையாகவோ, நாகமாகவோ தருகிறார்கள் என்கிறார் ஃபிராய்ட் (Ravichandran, 2015).

இலக்கியங்களில் படைப்பாளியின் வாய்த்தவறல்களும், விகடங்களையும் ஆசைகளின் புறவடிவத்தினையும் ஆராய்வதற்கு கனவுத்திகள் பயன்படுகின்றன.

- படைப்பாளி
- படைப்புக்களில் வரும் பாத்திரங்கள்
- படைப்புக்குரிய வாசகன்.

இவற்றின் வழியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது குறுந்தொகையில் தலைவன், தலைவி, தோழி காதற்பரத்தி ஆகிய பாத்திரங்களின் மனநிலையும் படைப்பாளுமையும் உளவியல் நோக்கில் விளக்கப்படுகின்றது.

## களவில் தலைவி மனநிலை

பழந்தமிழ் மக்களின் அகவாழ்வு களவு, கற்பு என இருவகையாக இருந்தது. அன்புடைய தலைவனும், தலைவியும் மனமுடித்தற்கு முன்பு வாழ்வது களவு என்றும் மனமுடித்த பின்பு வாழ்வது கற்பு வாழ்கை என்று வரையறைப்படுத்தியுள்ளனர். தலைவன் தலைவியின் உள்ளங்கள் இணைந்த ஒழுக்கத்தினை அகத்தினை எனப்படும்.

வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று

ஆயிரண்டென்ப வரைதல் ஆறே

தலைவியை தலைவன் களவு வெளிப்பட்ட பின்பும், களவு வெளிப்படாது முன்பும் மணம் முடித்தனர் என்பதை தொல்காப்பியம் கூறுகின்றது (Vellaivarananan, 1983).

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்

காமக் கூட்டம் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

இன்பமும் பொருளும் அறமும் பெற்று அன்பொடு கூடும் அக எழுக்கம் ஐந்தினையிலும் காமக் கூட்டம் சேறுவது வேதமறிந்தவர்கூறும் எண்வகை மனத்தின் யாழோடு கூடிய கந்தருவரது கூட்டமே ஐந்தினைக்கும் உரியது (Vellaivarananan, 1983).

..........................யாமோர் மேன

தவலருஞ் சிற்ப்பின் ஐந்நிலம் பெறுமே4

ஐந்தினைக்கும் பொருந்திவரும் யாழோர் கூட்டம், ஐவகை கூட்டமாவன. களவு, கற்பு, உடன்போக்கு, இற்கிழத்தி, காமக்கிழத்தி, காதற்பரத்தை என்று கொடுப்பாரும் இன்றி கேட்பாரும் இன்றித் தலைமகனும், தலைமளும் தாமே கூடுவது ஐந்நிலத்திற்கும் உரியதாகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் களவு வாழ்க்கை நிகழ்ந்துள்ளமையை இலக்கணங்கள் வரையறுத்துள்ளன (Manavalan, 2012).

தலைவன் களவு காலத்தில் கூடியிருந்துவிட்டு வரைவுமேற்கொள்ளாமல் தன்னை விட்டுவிடுவாரோ தலைவன் என்று தலைவி மனம் புலம்புதல்

யாரும் இல்லை; தானே கள்வன்

தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?

தினைந்தாள் அன்ன சிறுபசுங்கால

ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்

குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே.

தலைவன் என்னை களவில் மணந்த காலத்தில் சான்றாவார் ஒருவரும் இல்லை. தலைவனாகிய கள்வன் ஒருவன் தான் இருந்தான். அவன் செய்த சூளுறவினின்றும் தப்புவானாயின் நான் என்ன செய்வேன். ஓடுகின்ற நீரில் ஆரல்மீனின் வருகையை பார்த்தபடி நாரைமட்டும் தான்

இருந்தது மீனை பார்த்தலால் தலைவன் கூறிய வார்த்தைகளை கேட்டிருக்க முடியாது நான் என்ன செய்வேன் என்று புலம்புகின்றாள் தலைவி களவு வாழ்க்கையில் தன்னையும் அறியாமல் இருந்துவிட்டு, தலைவன் பொய்ச்சொல்லி கூடினான் என்பதும் தலைவியின் மனம் ஒத்திசைவினால் இருவரும் சேர்ந்தனர் தலைவன் வராததால் தலைவி மனம் புலம்புகின்றாள், எதிர்பார்ப்பு ஏமாற்றமானதால் சோகம் தோன்றுகிறது.

மெய்ம்மை ஈகோவுடன் (reality ego) ஈகோலிபிடோ (ego libido) வைத்துத்டுக்கொள்ளும் சமச்சீரற்ற உறவுமுறை மனநோய்க்கு வழிவகுக்கிறது. தன்மோகத்தோடு கூறுகிறார் ப்ராய்ட்- இங்கு தலைவியின் நிலையிலும் துன்பம் ஒருவகை இன்பத்தை உருவாக்குகின்றது என்பது இதன் மூலம் அறியப்படுகின்றது.

துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே

நன்றுமன் வாழி தோழி நம் படப்பை

நீர் வார் பைம் புதற் கலித்த

மாரிப் பீரத்து அலர் சில கொண்டே

தலைவனிடம் பீர்க்கம் பூவை எடுத்துக்கொண்டுச் சென்று இப்பூவைப் போன்று பசலைநோய்க்கு ஆட்கொண்டுள்ளால் தலைவி என்று அலர் பேசுவார்கள் கூறினாலும் எனக்கு நல்லதுதான். அப்போதுதான் அவர் என்னை வரைந்துக் கொள்வார் என தலைவியின் எண்ண ஓட்டங்களை ஆசிரியரின் வழி அறியப்படுகின்றது. தலைவனிடம் நேரிலேச் சென்று கூறினாலும் மணந்துகொள்ளமாட்டான் என்று இப்பாடலின் வழி அறியப்படுகின்றன. செய்தியாகும் அகநிலைப் போராட்டங்கள் உடல் நோய்குறிகளாக வெளிப்படுவதைக் குறிக்கின்றது இதற்கு நிலைமாற்று இயக்கம் எனப்படும். நிலைமாறுபட்டு இயங்குதல் என்பதை இப்பாடல் மூலம் தலைவியின் மனப்போரட்டம் அதனால் பெறுகின்ற உடல் நோய்கள் இவைகள் குறியீடாக வெளிப்படுகின்றதை அறிய முடிகின்றது.

## தலைவனின் மனநிலை

ஒருவர் மீது ஒருவர் விருப்பம் கொள்வதற்கு அழகு இளமை என்ற புறத்தோற்றம் மட்டுமல்லாமல் ஆழ்மனதில் பதிந்துள்ள குழந்தைப்பாலுணர்ச்சியாகும் இயல்பூக்க நெறி அல்லது இன்பநெறி என்று பிராய்டு குறிப்பிடுகின்றார். இவற்றின் தாக்கமே இடிபஸ் சிக்கல் தன்மோகம் தன்னை தான் மோதிக்கொள்ளும் தன்மோகம் தன் இனத்திற்கு எதிரான இனத்திடம் கவர்ச்சிக் கொள்ளும் ஈடிப்பஸ் இவற்றின் உந்தல்கள்தான் உள்ளத்தின் செயல்களாக அமைகின்றது.

தலைவியுடன் எனக்கு இருக்கும் உறவு ஊரால் அறியப்படுமாயின் அவர் கொண்ட காமம் உண்மையானதாகாது என்னால் தலைவியை பிரிந்திருக்க முடியவில்லை. பிரிய நேரிடுமாயின் மடல் ஏறுவேன் அவ்வாறு மடலேறினால் தலைவியை தூற்றுவார்கள் அதனையும் என்னால் பொறுக்க முடியாது அவளைப் பிரிந்தாலும் உயிரோடு வாழ்தல் எனக்குப் பழியாகும்

பொழுது இடை தெரியின் பொய்யே காமம்

மா என மடலொடு மறுகில் தோன்றித்

தெற்றெனத் தூற்றலும் பழியே

வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே”

தலைவியின் மீது கொண்ட அன்பின் மிகுதியால் பிரியமுடியாமல், பிரிய நேரிடும் சூழலில் மடல் ஏறினால் ஊரார் பழிக்கும் தலைவி ஆளாவதையும் பொறுக்க முடியாமல் தலைவியின் பிரிவிற்குப் பின் தான் உயிரோடு இருந்தும் பழிதான் என்று பலச்சிந்தனைப்போராட்டங்களினால் மனச் சோர்வினை வெளிப்படுத்துவதாக அமைன்றது.

“காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி

மாலை மாலரும் இந்நோய்”

மாலை நேரங்களில்தான் இந்நோய் அதிகமாக காணப்படுகின்றது. என்பது இக்குறள் மூலம் அறியப்படுகின்றது தலைவன், தலைவி பிரிவின் துயரும் மாலைநேரங்களில்தான் அதிகமாகின்றது ஒருவரை ஒருவர் உடனே சந்திக்க வேண்டும்மென்று எண்ண உந்தல்கள் இவற்றின் மூலம் அறியப்படுகின்றது (Shanmugam, Chithraputhiran, 2005).

கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்

வெண்ணெய் உணங்கல் போலப்

பரந்தன்று, இந்நோய் நோன்றுகொலற்கு அரிதே!

அதிக சூரியவெப்பத்தினால் வெண்ணெய் உருகி பரக்கின்றதை பார்த்து இரண்டு கைகளும் இல்லாத ஊமையனால் எவ்வறு அதனை பாதுகாக்க முடியாதோ அவ்வாறே எனக்கும் தலைவியை பிரிந்ததினால் எனக்குள் வந்த காமநோயை சொல்லவும் முடியாமல், பொறுக்கவும் முடியாமல் அல்லாடுவதாக இப்பாடல் கருத்து அமைகின்றது ஒரு சில எண்ணங்கள் மட்டும் திரும்பத்திரும்ப உதிக்கின்றது ஈகோவின் சிந்தனைப்பாங்கு பிடிப்பு என்கிறார் ப்ராய்ட் (Ravichandran, 2015).

## தோழி கூற்றில் தலைவியின் மனம்

தச்சன் செய்த கைவண்டியை சிறுவர் ஏறிச்செல்லுகின்ற இன்பம் இல்லையானாலும் கையினால் இழுப்பதினால் அவ்வின்பத்தின் இயல்பை இதில் அடைகின்றன. தன்னிடம் தலைவன் இல்லையன்றாலும் பரத்தையிடம் சென்றிருந்தாலும் முன்பு தன்னுடன் சேர்ந்திருந்ததை நினைத்து மகிழ்ந்தோம். தோழிக் கூற்று பாடலின் செய்தி வாயில் மறுத்ததாக அமைகின்றது.

ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல

உற்றுஇன் புறோம் ஆயினும் நற்றோர்ப்

பொய்கை ஊரன் கேண்மை,

இந்த பாடலின் வழி தலைவியின் பின்னோக்கு நிலை புலனாகிறது. தலைவனுடன் தற்போது இணைந்திருக்கும் இன்பம் கிடைக்ககாவிடினும், களவின் போது தலைவனுடன் நான் இருந்த காட்சிகளை நினைத்துப் பார்த்து இன்புறுகின்றேன். அவ்வாறு நான் இன்பமாக இருந்தாலும் என்மனதின் உண்மை நிலை தலைவன் இல்லாததால் வளையல்கள் நெகிழ்ந்தன என்று தலைவியின் களவு வாழ்க்கையை ஓட்டிப் பார்ப்பதாக அமைகின்றது.

உள்ளத்தில் ஏதோ ஒரு பொருளைப் பற்றி நினைவியக்கம் நிகழ்ந்துக் கொண்டே இருக்கும் இதனை வில்லியம் ஜேம்ஸ் 1890-ல் நனவோடை நிலை எனப் பெயரிட்டார்.

தோழி தலைவியயை பார்த்து அவர் சென்ற வழிகளில் பெண்யானையின் பசியை நீக்கும்படி தம்துதிகையினால் ‘யா’ மரத்தினை பட்டையின் உரித்து அதன் நீரை பருகச் செய்யும் அந்த அன்பு நிறைந்த காட்சியை கண்டதும் விரைவில் வருவார் நம் தலைவர்,

நசைபெரிது உடையர்: நல்கலும் நல்குவர்:

பிடிபசிகளைய பெருங்கை வேழம்

மென்சினை யாஅம் பொளிக்கும்

அன்பின் தோழி! அவர் சென்ற ஆறே[11]

இங்கு ஆண்யானை, பெண்யானையின் தாகத்தினைத் தீர்க்கின்றது அது குறியீடாக கூறப்படுகின்றது. ஆண்யானையும், பெண்யானையும் இணைந்திருப்பதை கண்ட தலைவன் தன் தலைவியுடன் இணைந்திருந்த நாட்களை நினைத்துப்பார்த்து உடனே பார்க்கவேண்டும் என்ற உள்ளம்நெகிழ்வினால் தலைவன் வருவார் என்று இப்பாடலின் மூலம் அறியப்படுகின்றது.

"இட்" உந்தல்களினால் தலைவனின் மனநில தலைவியை காணத்துடிக்கின்ற உள்ளத்தின் ஆற்றல் வெப்படுகின்றது

யானைதன் கொல்மருப்பு ஒடியக் குத்திச் சினம் சிறந்து

இன்னா வேனில் இன்துணை ஆர

முளிசினை யாஅத்துப் பொளி பிளந்து ஊட்டப்

இங்கு குறியீட்டின் வாயிலாக யானையும், பிடியின் அன்பொத்தக் காட்சி புலப்படுகின்றது உவமை இறைச்சி கூட ஒருவகை உளசிந்தனையே ஆகும். இவை தத்துவத்தாலும் அனுபத்தாலும் படைக்கப்பட்டவை. உளவியல் அறிவியல் முறையில் இனங்கண்டவை ஆகும்.

காதற்பரத்தைக் கூற்றில் காணும் உள்ளம்

"கழினி மாஅத்து விளைந்து உகு தீம்பழம்

பழன வாளை கதூஉம் ஊரன்

எம் இல் பெருமொழி கூறி, தம் இல்,

கையும் காலும் தூக்கத் தூக்கும்,

ஆடிப் பாவை போல

வயிலில் விளைந்த மாம்பழம் அதனை வைத்தவருக்கு பயனில்லாமல் மீன் களுக்கு பயன்பட்டன தலைவன் தலைவிக்குச் சொந்தமாகாமல் எனக்கு சொந்தமானால் என்று பரத்தை கூறிவதாக இப்பாடல் அமைகின்றது. தலைவி வீட்டில் கடமையென இருக்கின்றான் என் வீட்டில் விருப்பம்போல் இருக்கின்றான் என்பதாக அமைகின்றது.

தலைவியை தலைவன் விருப்பி மனமுடித்தாலும் புதல்வனை பெற்ற காலத்தில் பரத்தையிடம் நாடிச்சென்றதாக இப்பாடல் கூறுகின்றது. தான் விரும்பி பெறுவதற்கும், தன்னை விரும்பி பிறர் பெறுவதற்கும் வேறுபாடு உணர்ந்த தலைவனின் மனநிலை அறியப்படுகின்றது.

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரு உம் மேவற்றவாகும்

தொல்காப்பியரின் கருத்து உயிர்கட்டு இன்பம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணத்தை விளக்கும் தன் விருப்பத்தோடு இயைந்து வரும் வினை நிகழ்ச்சியே இன்பம் தருவது இவ்வியற்கை எல்லாம் உயிர்க்கும் பொது என்பது தொல்காப்பிய நூற்பா நுவலும் கருத்து. தலைவன் விருப்பப்படி செயல்படும் பரத்தையிடத்தும் அவனுக்கும் இன்பம் தோன்றும் அவன் விருப்பபடி செயல்படாத தலைவியிடத்தும் அவனுக்கும் இன்பம் வரும் இளம்பூரணரின் விளக்கமாகும்.

இன்பம் தோன்றுவதற்கு காரணம் இன்பத்திற்குரிய பொருளன்று தான். விரும்பியவாறு தன் விழைவு நிறைவேறலே ஆகும். தொல்காப்பியர் கருத்தோடு ப்ராய்டின் கருத்தும் ஒன்றி நிற்கக் காண்கிறோம்.[15] உலகக் கட்டுபாடுகளைத் தாண்டியது அல்லது விழைவு நிறைவேற்றமே ஆகும்.

## முடிவுரை

குறுந்தொகையில் பாடல்களில் தலைவன், தலைவி தோழி, காதற்பரத்தி பாத்திரங்களின் வழியாக மனநிலயினை உளவியல் நோக்கில் ஆராயப்பட்டது தலைவன், தலைவியை நினைத்து வருந்தி ஏங்கும் நிலையினை புலவர்கள் எடுத்துரைத்துள்ள விதம் அறியப்பட்டது இவ்வாறு சங்ககாலம்தொட்டே தலைவன், தலைவியின் வாழ்க்கைமுறை அன்பொடு கலந்து வாழ்வதுவே அதனை நாம் மறுத்தோ வெறுத்தோ வாழாமல், மனஒத்த, இன்பம் கலந்த இயற்கை உணர்வோடு வாழ்வோம். வரும் சந்ததிகளுக்கு அன்பொழுக்கத்தை அறிவிப்போம். பழமையையும் மறக்காமல்

புதுமையையும் விளக்காமல்' சங்கப்புலவரும், சிக்மெண்ட் ப்ராய்டு கருத்தும் சான்றாகட்டும் இணைந்தே வாழ்ந்து இல்லறம் காப்போம்.

## References


Avvai duraisamy pillai, Su., sanga ilakkiyam - Ettuthogai Ainkurunuru Moolamum Uraiyum, Gowra Puthaga Maiyam, Chennai, India.

Manavalan A. A., (2012) Irupathaam Nootrandin Iakkiya Kotpaadu, International Institute of Tamil Studies, Chennai, India.

Ravichandran T. K., Sigmund Freud Ulappaguppaaivu ariviyal, Alaigal Veliyeettagam, Chennai, India.

Shanmugam, A., Chithraputhiran, H., araichi muraimaigal, Annam Akaram pathipagam, Chennai, India.

Vellaivarananan K., (1983) Tolkappiyam kalaviyal Uraivalam, Madurai Kamaraj University, Madurai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License